# ஆண்டவருடைய பாடுகளின் குருத்து ஞாயிறு

## திருப்பலி முன்னுரை

பாஸ்கா மறைபொருளை நிறைவேற்ற எருசலேம் நகருக்குள் கிறிஸ்து நுழைந்ததை தாயாம் திருச்சபையோடு சேர்ந்து கொண்டாட அழைக்கப்பட்டு இருக்கிறோம். நாற்பது நாட்களின் தவவாழ்வுக்குப்பின்னர் இந்த பவனியை மேற்கொண்டு நாமும் கிறிஸ்துவோடு புனித வாரத்திற்குள் நுழைகின்றோம்.

பவனியாக அழைத்து சென்ற மக்களே, ஓசான்னா பாடிய திருக்கூட்டமே, இவன் வேண்டாம் என்றும், ஒழிக! ஒழிக!! என்றும், சிலுவையில் அறையும் என்றும் கத்தி கூச்சல் எழுப்புகின்றனர். கூச்சல் வெற்றி கண்டது. இன்றும் கூச்சல் வெற்றி காண்கிறது. ஆனால் நியாயத்திற்காக, அநியாயத்திற்காகவா என்பதுவே நம்முடைய கேள்வி. நியாயத்திற்கு குரல் கொடுப்பவர்கள் பொதுவாக கூச்சல் எழுப்புவது இல்லை என்பதுவும் நாம் அறிந்ததே. அப்படியென்றால் கூச்சல் நடக்கின்ற இடமெல்லாம் அநியாயம் நடக்கின்ற இடமென்று சொல்லலாமா? இந்த சிந்தனையோடு பங்கேற்று பயன் பெறுவோம்.

நாமும் இன்று ஏற்படுத்திய ஓசான்னா என்ற கீதங்கள், கூச்சல் தானா? இல்லை உணர்வுபூர்வமானதா? சிந்திப்போம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

புனித வாரத்திற்குள் பயணிக்கும் திருஅவை துன்புறும் மக்களோடு, தங்களை ஐக்கியப்படுத்தி கொண்டு, பணிகளில் அத்தகையோருக்கு துணையாக இருந்திட வரமருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

திருஅவைக்கு உம் ஆவியின் துணை தந்து, காலத்திற்கு ஏற்பவும், உம்முடைய திருவுளத்திற்கு பணிந்தும் தங்களது பயணத்தை இனிதே தொடர்ந்து ஆத்துமாக்களை உம்பாதத்தில் கொணர வரமருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

அநியாயத்திற்கும், அக்கிரமத்திற்கும் துணை போகாமல், அறச்சினத்துடனே, ஏழை எளிய மக்களின் ஏற்றமான வாழ்விற்கு துணை நிற்கின்ற வரமருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

பாடுகளை தியானிக்கும் நாங்கள், கடமையென கருதாமல், இன்று பல காரணங்களால் துன்புறும் மக்களோடு துணையிருந்து ஆறுதல் தந்து உடனிருப்பின் வழி உம்முடைய அன்பினை அவர்கள் உணரச் செய்ய வரமருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com